(2) உடுகுறியிட்ட விஞக்களுக்கு உடுக்குறியிடப்படாத விஞக்களாக பதில்

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : உடுக்குறியிட்ட 23 விஞக்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற விடைகள், 1 முதல் 23 வரையில் உள்ள உடுக்குறியிடாத விஞக்களுக்குரிய விடைகளாக இன்று மேலவை முன்னர் வைக்கப்படுகின்றன என்று நான் அறிவிக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள், மும்முர உரத் திட்டக் கடன்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுதல், உரங்கள் கிடைக்காமை குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : 42-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.—

"தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்கள், மும்முர உரத் திட்டக் கடன்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுதல், உரங்கள் கிடைக்காமை, அண்மையில் அரசு மேற்கொண்ட பாசனக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் பணியால் கால்வாய்களில் நீர் வரவின்மை ஆகியவற்ருல் துயருற்றுள்ளனர்".

* மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்கள், மும்முர உரத் திட்டக் கடன்கள் :

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையில் கும்பகோணத்திலும், தஞ்சாவூரில் உள்ள கூட்டுறவு மத்திய வங்கிகள் இரண்டுமாகச் சேர்ந்து நடப்பாண்டில் 12—8—1972 வரை ரூ. 495.63 லட்சம் கடன் வழங்கி உள்ளனர். கடந்த ஆண்டில் இதே கால அளவில் ரூ. 372.58 லட்சம் அளவிற்கு மட்டுமே அவை கடன்கள் வழங்கின. மேலும் தஞ்சை மாவட்டத்தில் மும்முர உரத் திட்டத்தின்கீழ்

1972 ஆகஸ்ட் 23] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

கடன்கள் வழங்க ரூ. 25 லட்சம் தனியே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, கடன்களைப் பெறுவதில் உழவர்களுக்கு எந்த இடர்பாடும் இல்லை.

உரங்கள் : தஞ்சை மாவட்டத்தில் 1971–72-ல் உபயோகிக்கப் பட்ட உர அளவு 33,192 நைட்ரோஜன் டன்களாகும். 1972–73ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள் 35,500 நைட்ரோஜன் டன்கள். இதில் 1—4—1972 முதல் 31—7—1972 வரை விநியோகிக்கப்பட்ட அளவு 3,663 நைட்ரோஜன் டன்களாகும்.

அரசு வணிகத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் முக்கியமான பல்வகை இருப்புகளின் நிலை 31—7—1972-ல் பின்வருமாறு இருந்தது :

உரங்களின் பெயர்.	மெட்ரிக் டன்
யூரியா	3,136
அமொனியம் சல்பேட்	3,920
டை-அம்மோனியம் பாஸ்பேட்	2,066
அம்மோனியம் பாஸ்பேட்	3,725

இது தவிர, நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திடமிருந்து 1,500 மெட்ரிக் டன் யூரியா தஞ்சாவூர் மாவட்டத்துக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் கணக்கில் இப்போது தான் அனுப்பப்பட்டுள்ளது. 4,000 மெட்ரிக் டன் யூரியா நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. அத்துடன், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை ஃபெடரேஷன் தனது சொந்தக் கணக்கில், நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திடமிருந்து ஏறத்தாழ 2,000 மெட்ரிக் டன் யூரியா உரத்தை தஞ்சை மாவட்டத்துக்குக் கொண்டு வந்துள்ளது. உள்நாட்டுத் தயாரிப்பாளர்களும் படிப்படியானதோர் திட்டத்தின்கீழ் போதுமான அளவுக்கு உரங்களை வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். உர மணிகள் தயாரிக்க, பாமினி உரமணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு இதுவரை 893 நைட்ரோஜன் டன்கள் உரத் தொகுப்பிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு 4,500 டன் உர மணிகளை உற்பத்தி செய்து விநியோகித்துள்ளது. இது தவிர, தஞ்சை மாவட்டத்தில் தொகுப்பு முறையல்லாத ஏற்பாட்டின்கீழ் 2,500 நைட்ரோஜன் டன்கள் தனியார் துறையில் விநியோகம் செய்ய இருப்பில் உள்ளது. எனவே, தொகுப்பு ஏற்பாட்டின்கீழும், பிற ஏற்பாடுகளின் கீழும் இம் மாவட்டத்தில் போதிய அளவு உர இருப்புகள் உள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள் மும்முர உரத் திட்டக் கடன்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுதல், உரங்கள் கிடைக்காமை குறித்து

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1972 ஆகஸ்ட் 23

கால்வாய்களைப் புதுப்பிக்கும் பணிகள் :

காவேரி கால்வாய்ப் பாசன ஏற்பாட்டை பேணி வரும் பணி சரிவரச் செய்யப்படாமல் இருப்பதால், பழைய காவிரி கால்வாய்ப் பகுதி பாசன ஏற்பாட்டிற்கு பழுது பார்க்கும் பணிகளையும், மேம்பாட்டுப் பணிகளையும் விரைவில் நிறைவேற்றும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 1972–73 முதல் தொடங்கி படிப்படியாக நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். இத் திட்டம் குறித்து 1972 ஆம் வருடம் ஜூன் மாதம் வரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

நிறைவேற்றப்பட்ட பணியின் மதிப்பு	ரூ. 182.84 லட்சம்
பணி முடிக்கப்பட்ட மதகுகளின் எண்ணிக்கை	5,641**
பயனுற்ற ஆயக்கட்டுப் பகுதி	153,530 ஏக்கர்
தொழிலாளர்களின் எண்ணிக்கை	28,600

கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப் பட்ட பணி, மதகுகளின் மூலம் முறையாகவும், திட்டமிட்டவாறும் நீரின் வினியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந் துள்ளது. அன்றியும், அதிக அளவு நிரைப் பயன்படுத்துவதினின்றும், நீரை விரயமாக்குவதிலிருந்தும் இத்திட்டம் தடுக்கிறது. மதகுகளின் கீழ் உள்ள ஆயகட்டுப் பகுதியை கணக்கில் கொண்டு தேவையான நீரை விநியோகிப்பதற்கு ஏற்றபடி மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, பாசனத்திற்கு போதிய நீர் கிடைப்பதில்லை எனக் கூறுவது பொருந்தாது. ஆனால் அதிக அளவு நீரைப் பயன்படுத்துவதும், விரயம் செய்வதும் தடுக்கப்பட்டுவிட்டன. மதகுகளை ஏற்படுத்தி முறையாக நீர் கிடைக்கச் செய்திருப்பதால் இதுகாறும் கரையினை உடைத்து மிகுந்த அளவில் நீரைப் பயன்படுத்தி வந்த விவசாயிகள் பாசனத்திற்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை எனக் கூறலாம். கால்வாயைப் புதுப்பிக்கும் பணியினால் ஏற்படும் லாபத்தினை விவசாயிகள் ஓரிரு பருவங்களில் கிடைக்கும் அனுப வத்தைக் கொண்டு நன்று உணரமுடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. கயவாய்ப் பாசனப் பகுதிக்கு அண்மையில் வருகை தந்த திட்டக் கமிஷனின் ஆலோசகர் திரு. சி. எஸ். ராமச்சந்திரன்

** இதில் 1,500 மதகுகளுக்கு அடைப்புக் கதவுகள் பொருத்தப் பட்டுள்ளன.

அவர்கள் புதுப்பிக்கும் பணியினை வெகுவாகப் பாராட்டி, நாட்டில் உள்ள பிற கால்வாய்ப் பாசனப் பகுதிகளையும் இம்முறையில் பதுப்பிக்கும்படி பரிந்துரை அளித்துள்ளார். எனவே, கால்வாய் களைப் புதுப்பிக்கும் பணிகள் நிறைவேற்றப்படுவதால் நடப்புக் குறுவைப் பருவத்தில் நீர் கிடைப்பது பாதிக்கப்படவில்லை.

அதுவும் 3-ம் தேதி நான், ரெவின்யூ, கூட்டுறவு, நீர்பாசனத் துறை அதிகாரிகள் எல்லோரையும் கூப்பிட்டு வைத்து புதிய ஆண்டுக்கான உர வினியோகம், கடன்கள் பற்றி விவரம் கேட்டேன். அவர்கள் கொடுத்த கணக்கு, போன வருடம் 11,844 டன்கள் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது—உரம். இந்த வருடம் இதுவரை கணக்கு 13,107 டன் உரம் கடன் மூலமே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களை எழுதச் செய்து அதற் கான ஏற்பாடுகளை செய்து "இந்து" பத்திரிகையில் அதைப்பற்றி விளக்கங்கள் கொடுத்திருக்கிறேன். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, வேண்டிய விளக்கங் களை எல்லாம் அமைச்சரவர்கள் அநேகமாக கொடுத்து விட்டார்கள். நேரடியாக கவனித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். இருப்பினும் ஒன்றிரண்டு விஷயங்களை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரை, தஞ்சாவூர் நிலவள கூட்டுறவு மத்திய வங்கி, கும்பகோணம் நிலவள வங்கிகளில் ஏறத் தாழ சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகம் கொடுத்திருக் கிறோம் என்ற புள்ளிவிவரம் கொடுத்தார்கள். ஆனால் கொடுக்கப் பட்ட பணம் சில இடங்களில் கொடுக்கப்படவில்லை என்று அறிகிறேன் ஆக, பல இடங்களில் அதிகமாகவும் சில இடங்களில் குறைவாகவும் கொடுக்கப்பட்ட காரணத்தால், அந்த இடத்தில் புகார் வந்திருப்ப தாக அறிகிறேன். அமைச்சர் அவர்கள் அதைப் பார்த்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, உரத்தைப் பொறுத்த வரை, பொட்டாசியம், நைட்ரஜன், சோடியம் ஆக மூன்றுக்கும் மொத்தத்தில் கணக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தனிப்பட்டவர்களுக்கு யூரியா, டை—அம் மோனியம் சல்பேட் கிடைப்பதில்லை என்ற புகார் இருந்துகொண்

டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் பணம் கொடுத்து வாங்குபவர்களுக்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. பழக்கத்தில் சொல்வார்கள், " இன்று ரொக்கம், நாளை கடன் " என்று. ஆனால் இன்று கடனில் உரம் கிடைக்கிறது. ரொக்கம் கொடுத்தாலும் கிடைக்க மாட்டேன் என்கிற நிலை தஞ்சையில் இருக்கிறது. இதை மாற்றும் வழிமுறை கையாளப்பட வேண்டும்.

மூன்றாவது, பாசன வாய்க்கால்களைப் புதுப்பிப்பது பற்றி ஆண்டு தோறும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே உள்ள விவசாயிகளைக் கலந்தாலோசிக்க வேண்டும். சில இடங்களில் தண்ணீர் போவதில்லை என்ற சங்கடம் ஏற்படுகிறது. கால்வாயின் முன் பகுதியில் இருப்போருக்கு தண்ணீர் கிடைத்து பின்னால் இருப்பவர்கள் காத்துக்கொண்டிருக்க வேண்டியதன் காரணமாக இருந்தாலும், அதை அமைச்சரவர்கள் பார்த்து, அதற்கு மற்றவற்றைப் போல ஏதாவது ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, கூட்டுறவுக் கடன்பற்றி நம்முடைய அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கூட்டுறவுக் கடனைப் பொறுத்த வரையில், சில இடங்களில் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது, சில இடங்களில் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சில இடங்களில் வாங்கியவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டியிருக்க மாட்டார்கள். நியாயமான அளவிலே வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்திருப்பவர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டது. கொடுப்பதில் ஒருவருக்குக் கொடுக்க வேண்டும், மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டாமென்பதில்லை. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காத இடங்களில் கடன் கொடுக்கப்படவில்லை. இதை அங்கத்தினர்களும் அறிந்திருப்பார்கள்.

உர வினியோகத்தைப்பற்றிச் சொன்னார்கள். உரம் பெறுவதில் இருக்கும் கஷ்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். உரம் 5, 6 முறைகளை நம்முடைய மாவட்ட நிலையில் கொடுத்திருக்கிறார்கள். ஏனென்றால் கிடைக்கும் உரத்தை வாங்கி, எப்பொழுதும் வழக்கமாக வினியோகிக்கின்ற வியாபாரிகள் வாங்க முன் வருகிற காரணத்தால், ரொக்கம் என்றிருந்ததை நிறுத்தி வைத்திருந்தார்கள். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சொல்லி, அதற்கான சர்டிபிகேட்டை கிராம முனுசிப்புகளே கொடுத்து வந்தார்கள். இப்போது வேளாண்மைத்

துறையில் அந்த சர்டிபிகேட்டை அளிக்க ஆவன செய்யப்பட்டிருக்கிறது. உரம் கொடுப்பதில் புதிய ஏற்பாட்டினை நாங்கள் செய்திருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கஷ்டங்கள் எல்லாம் உரம் பெறுவதில் இல்லை. முன்பிருந்த கஷ்டத்தைச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். இப்போது கஷ்டம் இருப்பதாகச் சொல்லியிருக்க முடியாது.

தஞ்சை மாவட்டத்தில் ஏரிகளின் கரைகளைப் பெரிய நிலச் சொந்தக்காரர்கள் வெட்டியிருக்கிறார்கள் என்றும், மற்றவர்கள் வெட்டவில்லை என்றும் சொல்கிறார்கள். அதுவும் மிராசுதாரர்களால் செய்யப்பட்டிருக்கிற வேலைகள் மிகவேகமாக நடத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மதகுகள், தலை மடை, வழி மடை என்று இருக்கின்றன. அவைகள் மூலமாகத் தண்ணீர் பாய்ச்சுவதற்குப் பதிலாக, கரைகளைச் சிறிது வெட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கெடுதல் செய்யக்கூடிய வேலைகளை நம்முடைய அரசு தடுத்திருக்கிறது. அதற்காகப் பாராட்ட வேண்டியதற்குப் பதிலாக குறை கூறியிருக்கிறார்கள்.

ஒரு பத்து ஏக்கர் வைத்து விவசாயம் செய்யும் விவசாயியின் நிலத்திலே மாடுகள் மேய்ந்துகொண்டிருக்கும். அந்தப் பயிரிலே மேய்ந்துக்கொண்டிருக்கும் மாடு யாருடையது என்றால் 10 வேலிக்காரருடைய மாடாக இருக்கும். அது போல இந்த வழியில் எல்லாம், பெரும் மிராசுதாரர்கள் கரை வெட்டி, தங்கள் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. நம்முடைய திறமையான பொறியியல் நிபுணர்கள் எல்லாம் நல்ல முறையில் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இதை எல்லோரும் பாராட்டிச் சொல்கிறார்கள். இன்று சரித்திரத்தில் இல்லாத அளவுக்கு மேட்டூரிலிருந்து காவிரிக்கு 32,000 கியூசெக்ஸ் தண்ணீர் விட்டிருக்கிறோம். நண்பர் திரு. சுவாமிநாதன் இதற்கு நன்றி செலுத்த வேண்டும். நேற்று முன்தினம் அவருடைய சொந்த வட்டமாகிய சீர்காழியிலே "டெயில் எண்ட்" வரை வேண்டிய அளவுக்கு தண்ணீர் வந்துவிட்டது. மேலும் அந்த மாவட்டத்தில் செய்ய வேண்டிய அனைத்தையும் சரிவரச் செய்திருக்கிறார்கள். எந்த முறையிலே எடுத்தாலும், மிகத் துரிதமாக வேலைகளை நமது இன்ஜினீயர்கள் செய்திருக்கிறார்கள். ஆகவே நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பயப்படாமல் நன்றி தெரிவிக்கலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது "சஜ்ஜஷன்" தான்; "அப்ளிகேஷன்" இல்லை. "சஜ்ஜஷன்" தான் சொன்னார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்), நான்காம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) நான்காம் திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (தமிழ் நாடு சட்டம் 58/1961) கண்டுள்ள விலக்குகள் குறித்து மறு ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட மன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் அடங்கிய குழு பால் பண்ணை அல்லது கால் நடை வளர்ப்புக்காகப் பயன்படுத்தப்படும் நிலங்கள் குறித்து, மேற்படி சட்டத்தின் 73 (X) பிரிவில் வழங்கப்பட்டுள்ள விலக்கை நீக்குமாறு பரிவுரை செய்துள்ளது. அக்குழுவின் பரிவுரையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

பால் பண்ணை அல்லது கால்நடை வளர்ப்பு ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் நிலங்கள் தொடர்பாக அளிக்கப்பட்டிருந்த விலக்கை நீக்கியதன் விளைவாக, நிலவாரியத்தின் அலுவலர்கள், மேற்படி சட்டத்தின் 31-வது பிரிவின்கீழ், மலைத் தோட்டங்களுக்கிடையே விரவியுள்ள அல்லது அவற்றை ஒட்டியுள்ள நிலங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கும் அளவிற்கே வரையறுக்கப்படும். எனவே நிலவாரியத்தின் அமைப்பை மாற்ற அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த இரண்டாவது திருத்தச் சட்டத்தால் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (தமிழ்நாடு சட்டம் 20/1972) திருத்தப்பட்டுள்ள தமிழ் நாடு 1961ஆம் ஆண்டு

@ 104–110ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.